**செய்தி வெளியீடு எண் : 2252** **நாள் : 09.11.2023**

## செய்தி வெளியீடு

இன்று (09.11.2023), 2024இல் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான ஆயத்தப்பணிகளின் முக்கிய அம்சங்களை ஆய்வு செய்வதற்காக தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், கேரளா மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி, அந்தமான் & நிக்கோபார் தீவுகள் மற்றும் இலட்சத்தீவுகள் ஆகிய யூனியன் பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாநில காவல்துறை ஒருங்கிணைப்பு (Nodal) அதிகாரிகளின் மண்டல மாநாடு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு, சென்னை ஜிஎஸ்டி சாலையில் உள்ள ஹோட்டல் ரேடிசன் புளூவில் தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரியால் நடத்தப்பட்டது.

இந்த மாநாட்டில், மூத்த துணைத் தேர்தல் ஆணையர் மற்றும் மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மைக்கான இந்திய சர்வதேசப் பயிற்சி(IIIDEM)நிறுவனத்தின் தலைமை இயக்குநர் திரு. தர்மேந்திர ஷர்மா, மூத்த துணைத் தேர்தல் ஆணையர் திரு. நிதேஷ் வியாஸ், துணைத் தேர்தல் ஆணையர் திரு மனோஜ் குமார் சாஹூ மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மூத்த அதிகாரிகள், மேற்கண்ட மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் காவல் துறை ஒருங்கிணைப்பு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in